1999 மார்ச் 23]

சொந்தக் கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு பதிவு மாவட்டத்திலே கடந்த ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ. 13.60 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகையால் ஒரே பதிவு மாவட்டத்திலே தொடர்ந்து கட்ட இயலாத நிலை இருக்கிற காரணத்தினாலே வருகின்ற ஆண்டிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 157, திரு. பி.என். வல்லரசு மற்றும் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

157—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு நினைவிடம்

***15909—திரு. பி.என். வல்லரசு:**
திரு. ம. முத்துராமலிங்கம்:

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை, அரசு நினைவிடமாக ஆக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை அரசு நினைவிடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த ஊர் பசும்பொன் என்றிருந்தாலும் அவர் வாழ்நாட்களிலே அதிக நாள் சிறைச்சாலையிலும், மீதமுள்ள நாட்களிலே மதுரை, திருநகர் வீட்டிலும் வாழ்ந்திருக்கிறார்கள். பல்வேறு சிறப்புக்களை நம்முடைய கலைஞர் அவர்கள் அரசின் சார்பிலே செய்து, அவர் பிறந்த சொந்த ஊரான பசும்பொன்னிலேகூட நினைவு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்து இறந்ததுகூட மதுரை, திருநகர் வீட்டிலேதான். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர் வாழ்ந்த வீட்டினை ஒரு நினைவு இல்லமாக மாற்றித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக பசும்பொன் கிராமத்திலேயுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சமாதி ரூ.7,28,778.00 செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதைப்போலத்தான், அந்த இடத்தை நினைவு இல்லமாக மாற்றுவதற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.3,87,198.00 அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய திருவுருவச் சிலைக்கு சென்னையில் ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் அரசின் சார்பாக மாலையிட்டு, மரியாதை செலுத்தப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் மதுரையில் அவர் வாழ்ந்த இல்லம் ஒரு வாடகை வீடு என்பதோடு, அந்த வாடகை வீட்டில் தற்போது இந்திரா காந்தி மெட்ரிகுலேஷன் பள்ளியும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்குரியவர்களுக்கு 1991 இல் அந்த வீட்டை விற்றுவிட்டார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் இந்த இடத்தை நினைவு இல்லமாக அமைப்பதற்கான வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

158—

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

***7977—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—